## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி

**முன்னிலை:**–திரு.G.பாண்டியராஜன், B.Com.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
கொடுமுடி.

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி மாதம் 4ம் நாள்
2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18ம் நாள் புதன்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.9/2021**
**CNR No. TNED13-000052-2021**

அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,
மலையம்பாளையம் காவல் நிலையம்,
(குற்ற எண்.393/2020) – குற்ற முறையீட்டாளர்

//எதிராக//

1. தாமோதரன், வயது 45/2020, (1ம் எதிரி),
த/பெ.லட்சுமிநாராயணன்,
43 மேல்நிலை தொட்டி வீதி,
வெள்ளோட்டாம்பரப்பு, ஈரோடு

2. பழனிசாமி, வயது 48/2020, (2ம் எதிரி),
த/பெ.கருப்பண கவுண்டர்,
நெ.3 பாப்பாவலசு, தவசிதோட்டம்,
பழமங்கலம், ஈரோடு. – எதிரிகள்

| வரிசை எண் | விளக்கம் | விவரங்கள் | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 22.10.2020 | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 23.10.2020 | |
| 3. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | – இல்லை – | மாண்புமிகு ஈரோடு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்ற |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:10:43 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | உத்தரவின்பேரில் முன் ஜாமினில் சென்ற நாள் 11.11.2020 |
| 4. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 05.01.2021 | |
| 5. | குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 17.12.2021 | |
| 6. | பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 பிரிவு 355ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள் | 1. மாண்புமிகு ஈரோடு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் கு.வி.மு.ச.பிரிவு 438ன் கீழ் தாக்கல் செய்த மனுவின் உத்தரவு Crl.M.P.No.1814/2020 உத்தரவு நாள் 09.11.2020 – அனுமதிக்கப்பட்டது.<br>2. கு.வி.மு.ச.பிரிவு 242(3)ன் கீழான மனு எம்.பி.எண்.1/2025 உத்தரவு நாள் 31.07.2025 – அனுமதிக்கப்பட்டது. | |
| 7. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | (see table below) | |
| 8. | எதிரிகளிடம் குற்றம் குறித்து பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 பிரிவு 351(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | 02.02.2026 | |
| 9. | எதிரிகள்மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள்<br>– இல்லை – | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள்<br>– இல்லை – |
| 10. | வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள் | 10.03.2026 | |
| 11. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 18.03.2026 | |

| சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1 | 31.07.2025 | 19.01.2026 |
| அ.சா.2 | 31.07.2025 | 31.07.2025 |
| அ.சா.3 | 24.09.2025 | 24.09.2025 |
| அ.சா.4 | 24.09.2025 | 24.09.2025 |
| அ.சா.5 | 19.01.2026 | 19.01.2026 |
| அ.சா.6 | 29.01.2026 | 29.01.2026 |
| அ.சா.7 | 29.01.2026 | 29.01.2026 |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:10:48 +0530

இவ்வழக்கு 02.02.2021ம் தேதி சி.சி.எண்.9/2021 என்ற எண்ணில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, வழக்கு இறுதியாக 10.03.2026ம் தேதி என் முன்பு விசாரணைக்கு வந்தபொழுது குற்றம் முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை I அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.எஸ்.துரைசாமி அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஆகும்.

1. **மலையம்பாளையம் காவல் உதவி ஆய்வாளர் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:–**

22.10.2020ம் தேதி 16.45 மணிக்கு மலையம்பாளையம் காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட வேலப்பம்பாளையம் பிராந்திகடை அருகில் ரோட்டில் சாட்சி சண்முகம் என்பவர் இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் அடிக்க சென்றபோது 1, 2 எதிரிகள் சாட்சி சண்முக்தை சட்டவிரோதமாக தடுத்து நிறுத்தி பொது இடத்தில் ஏண்டா தாயோலி தேவடியாபயலே என்று இருவரும் கெட்ட வார்த்தையால் பேசி சாட்சி சண்முகத்திற்கு அவமானத்தையும், அருவறுப்பையும் ஏற்படுத்தியதாகவும், 1ம் எதிரி சாட்சி சண்முகத்தை கையாலும், செம்மந் தடியாலும் மாறி மாறி அடித்து சாட்சி சண்முகத்திற்கு இடது கால் தொடையிலும், 2ம் எதிரி சாட்சி சண்முகத்தை கையாலும், செம்மந் தடியாலும் மாறி மாறி அடித்து சாட்சி சண்முகத்திற்கு வலது கால் தொடையிலும் சாதாரண காயங்களை ஏற்படுத்தியதாகவும், 1,2 எதிரிகள் சாட்சி சண்முகத்தை தடியால் அடித்து கொல்லாமல் விடமாட்டோம் என குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்ததாகவும், 1, 2 எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii)ன் கீழ் குற்றம்புரிந்துள்ளதாக மலையம்பாளையம் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:10:53 +0530

2. **<u>வழக்கை புலன் கொண்டு எதிரிகளை அழைத்தல்:</u>**

மேற்படி இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் ஆய்வு செய்து இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii)ன் கீழ் புலன் கொள்ளக் கூடிய முகாந்திரம் இருந்ததால் இவ்வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது கு.வி.மு.ச பிரிவு 207—ன் கீழ் எதிரிகளுக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.

3. **<u>குற்றச்சாட்டுக்கள் மற்றும் எதிரிகளின் கோரிக்கை</u>**:

எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிகள் குற்றம் புரிந்திருப்பதற்கான முதல் தோற்ற வழக்கு இருந்ததால் கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் கீழ் எதிரிகள்மீது இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii)ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து வழக்கை மேல் தொடர விளக்கிக்கேட்டபோது தான் குற்றவாளிகள் இல்லை என கூறினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்படுத்தப்பட்டது.

4. **<u>வழக்கு விசாரணை</u>**:

அரசு தரப்பில் குறிப்பிட்டிருந்த பட்டியல் சாட்சிகளில் பட்டியல் சாட்சி 5 தவிர்த்து அ.சா.1 முதல் அ.சா.7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. **<u>அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்</u>:—**

(i) **வழக்கின் புகார்தாரரான சண்முகம் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில்** 20.10.2020ம் தேதியன்று தான் தனது இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போடுவதற்காக வேலப்பம்பாளையத்தில் உள்ள பெட்ரோல் பங்கிற்கு அன்று மாலை 04.45 மணிக்கு சென்றதாகவும், தாமோதரன் மற்றும் பழனிசாமி தன்னை வழிமறித்து தாயோலி, கண்டாரோலி பையன் என்று தகாத வார்த்தைகளால் தன்னை திட்டினார்கள் என்றும், தான் அவர்கள் இருவரிடமும் எதற்காக தன்னை திட்டுகிறீர்கள் என்று கேட்டதாகவும், முதலில் எதிரி பழனிசாமி ஒரு செம்மங்குச்சியால் தனது உடலில் தொடை பகுதியில் அடித்ததாகவும், எதற்காக தன்னை அடிக்கிறீர்கள்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:10:57 +0530

என்று கேட்டதற்கு எதிரி தாமோதரன் அதே செம்மங்குச்சியால் தன்னை அடித்ததாகவும், அருகில் இருந்த சக்திவேல் மற்றும் கார்த்திகேயன் தங்களை விலக்கிவிட்டார்கள் என்றும், எதிரிகள் இருவரும் தன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொன்னதாகவும், எதிரிகள் இருவரும் சம்பவ இடத்திலேயே அந்த தடியை போட்டுவிட்டு போய்விட்டார்கள் என்றும், தான் சம்பவம் பற்றி தனது மனைவி பரமேஷ்வரிக்கு தகவல் கொடுத்ததாகவும், சம்பவ இடத்திற்கு தனது மனைவி சாட்சி பரமேஷ்வரி வந்து ஒரு ஆம்னி வேன் மூலம் தன்னை ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாகவும், சம்பவத்திற்கு அடுத்தநாள் மலையம்பாளையம் போலீசார் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு வந்ததாகவும், தான் அவர்களிடம் **அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம்** கொடுத்ததாகவும், **செம்மங்குச்சி அ.சா.பொ.1** என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**(ii) அ.சா.2 பரமேஷ்வரி தனது சாட்சியத்தில்** சுமார் நான்கரை வருடங்களுக்கு முன்பு மாலை 04.30 மணிக்கு தனது கணவர் அ.சா.1 சண்முகம் அவரது இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போடுவதற்காக வேலப்பம்பாளையத்தில் உள்ள பெட்ரோல் பங்கிற்கு சென்றதாகவும், தனது கணவர் அ.சா.1 சண்முகத்தை எதிரிகள் வழிமறித்து கெட்ட வார்த்தையால் திட்டி ஒரு செம்மங்குச்சியால் தனது கணவர் அ.சா.1 சண்முகத்தை அடித்துவிட்டார்கள் என்றும், அருகில் இருந்தவர்கள் தனக்கு தகவல் சொன்னதன் பேரில் தான் சம்பவ இடம் வந்து தனது கணவர் அ.சா.1 சண்முகத்தை ஒரு ஆம்னிவேன் மூலம் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு தனது கணவரை கொண்டுபோய் சேர்த்ததாகவும், ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு மலையம்பாளையம் போலீசார் வந்து தனது கணவர் அ.சா.1 சண்முகத்தை விசாரிக்கும்போது அவர் போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

(iii) **அ.சா.3 கார்த்திகேயன் தனது சாட்சியத்தில்** 22.10.2020ம் தேதியன்று தானும் தனது அண்ணன் சக்திவேலும் பேக்கரி பொருட்களை எடுத்துகொண்டு கடைக்கு சென்றதாகவும், வேலப்பம்பாளையத்தில் கூட்டமாக இருந்ததாகவும், அ.சா.1

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:11:02 +0530

சண்முகத்தை யாரேனும் வழிமறித்து தகராறு செய்தார்களா என்றோ அவரை அடித்து காயப்படுத்தினார்களா என்றோ தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

(iv) **அ.சா.4 சக்திவேல் தனது சாட்சியத்தில்** 22.10.2020ம் தேதியன்று தானும் தனது தம்பி கார்த்திகேயனும் பேக்கரி பொருட்களை எடுத்துகொண்டு கடைக்கு சென்றதாகவும், வேலப்பம்பாளையத்தில் கூட்டமாக இருந்ததாகவும், அ.சா.1 சண்முகத்தை யாரேனும் வழிமறித்து தகராறு செய்தார்களா என்றோ அவரை அடித்து காயப்படுத்தினார்களா என்றோ தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

**(v) அ.சா.5 மாரியப்பன் தனது சாட்சியத்தில்** பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான். மேற்படி கையெழுத்துக்களைதான் எங்கு, எப்போது யாரிடத்தில் செய்தேன் என்று தனக்கு ஞாபகம் இல்லை என்றும், **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2** என்றும், **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3** என்றும் கூறி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

**(vi) அ.சா.6 மருத்துவர் ரவிச்சந்திரன் தனது சாட்சியத்தில்** 22.10.2020ம் தேதியன்று தான் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவ அலுவலில் இருந்தபோது மாலை 05.10 மணியளவில் சண்முகம் என்பவரை அவரது மனைவி பரமேஷ்வரி தன்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்ததாகவும், அவர் 22.10.2020ம் தேதி மாலை 04.45 மணியளவில் தன்னை அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் கைகளாலும், கட்டையாலும் வேலப்பம்பாளையம் அரசு மதுபான கடை அருகில் வைத்து தாக்கியதாக தன்னிடம் தெரிவித்தார் என்றும், அவர் தனக்கு தோள்பட்டை,

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:11:07 +0530

நெஞ்சு ஆகிய இடங்களில் வலி இருப்பதாக தன்னிடம் கூறினார் என்றும், தான் அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கியதாகவும், தான் வழங்கிய **காயச் சான்று அ.சா.ஆ.4** என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(vii) **அ.சா.7 வரதராஜன் காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில்** 22.10.2020ம் தேதியன்று தான் மலையம்பாளையம் காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது, ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசனை பெற்று ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சண்முகம் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து மலையம்பாளையம் காவல்நிலைய குற்ற எண்.393/2020 இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) ன் படி **அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்ததாகவும், பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான வேலப்பம்பாளையம் அரசு மதுபான கடை அருகில் சென்று சாட்சிகள் பிரபாகரன் மற்றும் மாரியப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ.6 பார்வைமகஜர்** மற்றும் **அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம்** தயார் செய்ததாகவும், வேலப்பம்பாளையம் அரசு மதுபான கடை அருகில் சம்பவ இடத்தில் இருந்த சுமார் 94cm நீளமுள்ள செம்மந்தடி ஒன்றை சாட்சிகள் பிரபாகரன் மற்றும் மாரியப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் **அ.சா.ஆ.8 கைப்பற்றுதல் மகஜர்** தயார் செய்து கைப்பற்றியதாகவும், சாட்சிகள் கார்த்திகேயன், சக்திவேல், பரமேஷ்வரி, பிரபாகரன் மற்றும் மாரியப்பன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கின் வாதி சண்முகத்தை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான செம்மந்தடியை **அ.சா.ஆ.9 படிவம் 91** மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், இவ்வழக்கில் காயம் பட்ட வாதி சண்முகம் என்பவருக்கு சிகிச்சை அளித்த ஈரோடு அரசு மருத்துவமனை மருத்துவர் ரவிசந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:11:13 +0530

காயச்சான்று பெற்றதாகவும், இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள்மீது இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii)ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியமானது முடித்து வைக்கப்பட்டது.

6. **<u>எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவல்:</u>**

அரசு தரப்பு சாட்சிகளின் மேற்படி சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் மற்றும் குற்ற விபரங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் வழக்கை பொய் வழக்கு என்றும், பொய் சாட்சி என்றும் கூறினார்கள். மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறியதால் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7. எதிரிகள் இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii)ன் கீழ் குற்றம்புரிந்துள்ளார்கள் என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு இருப்பின் எதிரிகளுக்கு கொடுக்கப்படவேண்டிய தண்டனை எவ்வளவு என்பதே இவ்வழக்கில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி ஆகும்.

8. **<u>பிரச்சனைக்கான தீர்வு</u>**:–

அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரிகள் இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii)ன் கீழ் குற்றம்புரிந்துள்ளார்கள் என்பதை அ.சா.1, அ.சா.2, அ.சா.6, அ.சா.7 சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அ.சா.பொ.1 மூலமாகவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டார்.

9. எதிரிள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் அரசு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:11:18 +0530

தரப்பில் பிறழ் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளர்கள் என்றும், பார்வை மகஜர் சாட்சியான அ.சா.5ம் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும், எனவே எதிரிகள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படாததால் எதிரிகளை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டுமென வாதிட்டார்.

10. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு, சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. 22.10.2020ம் தேதி 16.45 மணிக்கு வேலப்பம்பாளையம் பிராந்திகடை அருகில் ரோட்டில் சாட்சி சண்முகம் என்பவர் இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் அடிக்க சென்றபோது 1, 2 எதிரிகள் சாட்சி சண்முக்தை சட்டவிரோதமாக தடுத்து நிறுத்தி பொது இடத்தில் ஏண்டா தாயோலி தேவடியாபயலே என்று கெட்ட வார்த்தையால் பேசி 1ம் எதிரி சாட்சி சண்முகத்தை கையாலும், செம்மந் தடியாலும் மாறி மாறி அடித்து சாட்சி சண்முகத்திற்கு இடது கால் தொடையிலும், 2ம் எதிரி சாட்சி சண்முகத்தை கையாலும், செம்மந் தடியாலும் மாறி மாறி அடித்து சாட்சி சண்முகத்திற்கு வலது கால் தொடையிலும் சாதாரண காயங்களை ஏற்படுத்தியும், 1,2 எதிரிகள் சாட்சி சண்முகத்தை தடியால் அடித்து கொல்லாமல் விடமாட்டோம் என குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்தார்களா என்பதை அ.சா.1, அ.சா.2, அ.சா.6, அ.சா.7 சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அ.சா.பொ.1 மூலமாகவும் அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பார்க்கவேண்டியுள்ளது.

11. இவ்வழக்கில் அ.சா.1 காயம்பட்ட சாட்சியாவார். அ.சா.2 அ.சா.1ன் மனைவி ஆவார். அ.சா.2ன் சாட்சியத்தை பார்க்கும்போது அ.சா.2 கேள்விநிலை சாட்சியம் என்பது தெரிய வருகிறது. அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அரசு தரப்பில் காட்டப்பட்டு இருந்தபோதும் அவர்கள் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள். பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.5 பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். அ.சா.6 அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஆவார். அ.சா.7 வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவார்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:11:22 +0530

12. இவ்வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள். மாண்புமிகு உச்சநீதிமன்றம் Balu Sudam Khalde //Vs// State of Maharashtra 2023 SCC OnLine SC 355 என்ற வழக்கில் காயம்பட்ட சாட்சியின் சாட்சியம் ஒன்றே வழக்கை தீர்மானிக்க போதுமானது என கூறியுள்ளதை கருத்தில் கொண்டு இவ்வழக்கில் அ.சா.1ன் சாட்சியம் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதா என்று பார்க்கும்போது அ.சா.1 தனது முதல் விசாரணையில் "ஆஜரில் உள்ள எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தான் சம்பவத்தின்போது தன்னை அடித்தார்கள் என்றும், 20.10.2020ம் தேதியன்று தான் தனது இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போடுவதற்காக வேலப்பம்பாளையத்தில் உள்ள பெட்ரோல் பங்கிற்கு அன்று மாலை 04.45 மணிக்கு சென்றதாகவும், தாமோதரன் மற்றும் பழனிசாமி தன்னை வழிமறித்து தாயோலி, கண்டாரோலிபையன் என்று தகாத வார்த்தைகளால் தன்னை திட்டினார்கள் என்றும், தான் அவர்கள் இருவரிடமும் எதற்காக தன்னை திட்டுகிறீர்கள் என்று கேட்டதாகவும், அந்த சமயத்தில் தனக்கு மிகுந்த அவமானம் ஆகிவிட்டதாகவும், முதலில் எதிரி பழனிசாமி ஒரு செம்மங்குச்சியால் தனது உடலில் தொடை பகுதியில் அடித்தார் என்றும், எதற்காக தன்னை அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி தாமோதரன் அதே செம்மங்குச்சியால் தன்னை அடித்தார் என்றும், அருகில் இருந்த சக்திவேல் மற்றும் கார்த்திகேயன் தங்களை விலக்கிவிட்டார்கள் என்றும், எதிரிகள் இருவரும் தன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொன்னார்கள் என்றும், எதிரிகள் இருவரும் சம்பவ இடத்திலேயே அந்த தடியை போட்டுவிட்டு போய்விட்டார்கள் என்றும், தான் சம்பவம் பற்றி தனது மனைவி பரமேஷ்வரிக்கு தகவல் கொடுத்ததாகவும்" சாட்சியமளித்துள்ளார்.

13. அ.சா.2 தனது முதல் விசாரணையில் "அருகில் இருந்தவர்கள் தனக்கு தகவல் சொன்னதன் பேரில் தான் சம்பவ இடம் வந்து தனது கணவர் அ.சா.1 சண்முகத்தை ஒரு ஆம்னிவேன் மூலம் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு தனது கணவரை கொண்டுபோய் சேர்த்தேன்" என சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா.1 சம்பவம் பற்றி தனது மனைவி பரமேஷ்வரிக்கு தகவல் கொடுத்தேன் என முரண்பட்டு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:11:27 +0530

சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.1 முதல் விசாரணையில் எதிரிகள் பழனிசாமி மற்றும் தாமோதரன் ஆகியோர்கள் தன்னை செம்மங்குச்சியால் அடித்தார்கள் என சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 குறுக்கு விசாரணையில் "எதிரிகள் இருவரும் செம்மங்குச்சி தடியால் தன்னை மாறி மாறி அடித்தார்கள் என்றால் சரிதான் என்றும், மேற்படி செம்மங்குச்சி தடி கணுக்கணுவாக உள்ளது என்றால் சரிதான் என்றும், மேற்படி தடியால் தன்னை அடித்ததால் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான் என்றும், மேற்படி காயத்தை மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான்" என்றும் சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா.6 மருத்துவர் தனது முதல் விசாரணையில் அ.சா.1ஐ தான் பரிசோதனை செய்து பார்த்தபோது அவருக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என்றும், அ.சா.1 தனக்கு தோள்பட்டை, நெஞ்சு ஆகிய இடங்களில் வலி இருப்பதாக தன்னிடம் கூறினார்" என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில் "பொதுவாக ஒரு நபரை கனுக்கள் உள்ள கட்டையாலோ அல்லது தடியாலோ மாறி மாறி அடித்தால் கன்றிய காயங்களோ அல்லது சிதறிய காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்" என சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 தன்னை செம்மங்குச்சியால் அடித்ததால் காயங்கள் ஏற்பட்டது என சாட்சியம் அளித்திருந்தாலும் மருத்துவரின் சாட்சியம் மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் "தான் சம்பவம் நடைபெற்ற பிறகு மலையம்பாளையம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று விட்டேன் என்றும், காவல் நிலையத்திற்கு தான் புகார் கொடுக்கும் பொழுது உடன் யார் இருந்தார்கள் என்றால் தனது மனைவியும், சக்திவேல் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும், தான் கொடுத்த புகாரில் கார்த்திகேயனும் சக்திவேலும் சாட்சி கையொப்பம் செய்தார்களா என்றால் செய்தார்கள்" என்றும் சாட்சியமளித்துள்ளார். ஆனால் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7 வழக்கில் காயம்பட்ட அ.சா.1 22.10.2020 அன்று மாலை காவல்நிலையத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக புகார் கொடுத்ததாகவும், அந்த புகாரில் அவரது மனைவியும் சாட்சிகள் சக்திவேல், கார்த்திகேயன் ஆகியோர்கள் சாட்சி

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:11:31 +0530

கையொப்பம் செய்ததாகவும் சொல்லி இருந்தால் அது தவறு" என சாட்சியமளித்துள்ளர். இதன்மூலம் அ.சா.1ன் சாட்சியத்திற்கும், அ.சா.7ன் சாட்சியத்திற்கும் இடையே முரண்பாடு உள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.5 பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் அ.சா.பொ.1 கைப்பற்றியது குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அ.சா.1 தனக்கு எதிரிகளால் காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்து இருந்தாலும் மேற்படி பிரச்சனையாவதற்கு முன் விரோதம் எதுவும் இல்லை என்றே சாட்சியம் அளித்திருக்கும்போது சாதாரணமாக 2 நபர்கள் அடித்தார்கள் என்பது ஏற்கக்கூடிய வகையில் இல்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே அ.சா.1 முரண்பட்டு சாட்சியமளித்திருப்பதாலும், அ.சா.1ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக அ.சா.6 மருத்துவரின் சாட்சியம் இல்லாததாலும், வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.3, அ.சா.4 ஆகியோர்கள் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளதாலும், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.5 பிறழ் சாட்சியாக மாறியுள்ளதாலும் அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து எதிரிகளை விடுதலை செய்வதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. எதிரிகள் மீது சாட்டப்படும் ஒவ்வொரு குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட வேண்டியது அரசு தரப்பின் பொறுப்பாகும். இவ்வழக்கில் எதிரிகள் மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் எதிரிகள் சந்தேகத்தின் பலனை பெற தகுதியுடையவர்கள் ஆகிறார்கள்.

**முடிவாக**, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, இவ்வழக்கில் எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii)ன் கீழ் குற்றவாளிகள் அல்லர் என்று முடிவு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:11:35 +0530

செய்து, எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும் எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு ஆஜர்படுத்தப்பட்ட வழக்கு சொத்தான செம்மங்குச்சி அ.சா.பொ.1 நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு பி.ஆர்.எண்.125/2020 என்ற எண்ணில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டு உத்தரவுப்படி நடக்கவும், மேல்முறையீடு இல்லையெனில் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு எதற்கும் உதவாது என கருதி அழித்திட வேண்டுமென கு.வி.மு.ச.பிரிவு 452ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18ம் நாள் புதன்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:11:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:–

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.சண்முகம் |
| அ.சா.2 | திருமதி.பரமேஷ்வரி |
| அ.சா.3 | திரு.கார்த்திகேயன் |
| அ.சா.4 | திரு.சக்திவேல் |
| அ.சா.5 | திரு.மாரியப்பன் |
| அ.சா.6 | மருத்துவர் திரு.ரவிச்சந்திரன் |
| அ.சா.7 | திரு.வரதராஜன் – காவல் உதவி ஆய்வாளர் |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:11:45 +0530

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**:

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 23.10.2020 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 23.10.2020 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.3 | 23.10.2020 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.4 | -- | காயச் சான்று |
| அ.சா.ஆ.5 | 23.10.2020 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 23.10.2020 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7 | 23.10.2020 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.8 | 23.10.2020 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.9 | 23.10.2020 | படிவம் 91 |

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u>**:-

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | செம்மங்குச்சி |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:-</u>** - இல்லை -

**<u>குறிப்பு</u>**

1. வழக்கு விசாரணைக் காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்து வந்தார்கள்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:11:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**<u>C.C.No.9/2021</u>**

| **S.No** | FORM ANNEXURE UNDER RULE 106 OF CRIMINAL RULE OF PRACTICE<br>**Description of Accused** | |
|---|---|---|
| 1 | Name of the Police Station and the Crime Number of the Offence | The Sub Inspector of Police, Malayampalayam Police Station, Crime No.393/2020 Under Section 341, 294(b), 323, 506(ii) of IPC |
| 2 | Name | A1 – Dhamotharan<br>A2 - Palanisamy |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:11:53 +0530

| | | |
|---|---|---|
| 3 | Father's Name | A1 – Lakshminarayanan<br>A2 – Karuppana Gounder |
| 4 | Occupation | -- |
| 5 | Residence | A1 – 43 Melnilai Thotti Veethi, Vellottamparappu, Erode.<br>A2 – No.3 Pappavalau, Thavasithottam, Palamangalam, Erode. |
| 6 | Age | A1 – 45/2020<br>A2 - 48/2020 |
| 7 | Date of Occurrence | 22.10.2020 |
| 8 | Date of Complaint | 23.10.2020 |
| 9 | Date of Apprehension | Nil |
| 10 | Date of Release on bail | Anticipatory Bail on 11.11.2020 |
| 11 | Date of Commitment | -- |
| 12 | Date of Commencement of trial | 17.02.2022 |
| 13 | Date of Closure of trial | 02.02.2026 |
| 14 | Date of Sentence or Order | 18.03.2026 |
| 15 | Date of Service of copy of Judgment or finding on Accused | Acquitted |
| 16 | Explanation of delay | No Delay |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:11:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.